1970 ஆகஸ்ட் 26]

மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் கொட்டகை கட்டுதல்

■36 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனை சவக்கிடங்கு அருகில் பொதுமக்கள் தங்குவதற்கு ஒரு 'செட்' (shed) அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவரவர்களே, மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள், ஏதாவது தங்களுக்கு வேண்டியவர்கள் இறந்துவிட்டால் அந்தச் சவத்தை வாங்கப்போகக்கூடியவர்கள் வெய்யிலும், மழையிலும் காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, அங்கே ஏதாவது தகரத்தினாலேயோ அல்லது ஆஸ்பெஸ்டாஸ் உலோகத் தினாலோ கூடிய ஒரு டின் ஷீட் போட்டு கொட்டகை மாதிரி அமைத்துக் கொடுக்க இனியாவது அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை சவக்கிடங்கு அருகில் இது கட்டப்பட வில்லை. சவக் கிடங்கிற்குப் பக்கத்தில் மகப்பேறு பிளாக் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே வருபவர்கள் தங்கு வதற்குக் கூடம் கட்ட முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. பொறியியல் துறையினர் கட்டுவதற்கான முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறார்கள். அது கட்டுகின்றபொழுது கனம் உறுப் பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று வருகிற பார்வையாளர் கள் அங்கு தங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். சவக் கிடங்கிற்குப் பக்கத்தில் உள்ள மகப்பேறு மருத்துவ மனையையொட்டிக் கட்டப் படுகிறது, அது பயன்படும்.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது: தலைவர் அவர்களே, மதுரை மருத்துவ மனையில் என்ன நிலைமை இருக்கிறதோ அதே நிலைதான் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மனைக்குப் பக்கத்திலுள்ள சவக் கிடங்கிற்குப் பக்கத்தில், வருபவர்களுக்கு இருக்க வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அங்கேயும் இதுபோல் 'செட்' கட்ட அரசு முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பாளையங்கோட்டை மருத்துவமனை பற்றிக் தனிக் கேள்வி போடவும். அது பற்றிய விவரம் இங்கு இல்லை.

DR. H. V. HANDE : In view of the fact that there is not enough space inside the compound of Madurai Erskine hospital, this waiting shed had been put up very near the mortuary. In view of all these things and in view of the fact that there had already been a programme drawn up to expand the hospital and another building was to be acquired but due to some red tape and

not proper understanding the expansion could not be gone through and new building had not been acquired. Will the Hon. Minister tell us what steps he has taken to see that the Government is able to cope up with increasing number of patients that are coming to Madurai Erskine hospital?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: வருகின்ற பொது மக்கள் தங்குவதற்குக் கூடம் கட்டுவது பற்றிய விவரம் மட்டுந் தான் இருக்கிறது. விரிவுபடுத்தும் முயற்சிகள் பற்றிய விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகள்

*37 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது 1969 அக்டோபரில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: வீடு இழந்தோருக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 2,990-ம் வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகள், குளங்கள் செப்பனிட வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 1,50,000-ம் செலவழிக்கப்பட்டது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: எந்தெந்த இடங்களில் எவ்வளவு செலவழிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைப் பற்றிய விவரங்கள் இல்லை.

நீலகிரி மாவட்டம் பண்ணை நிலங்கள் பேரில் அடிப்படைத் தீர்வை

*38 வினா—**திரு. கே. போஜன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காப்பி முதலியன சாகுபடி செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு அடிப்படை நிலவரி வசூலித்து வருவது உண்மையா?

(இ) ஆம் எனில், நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் நிலவரி வசூலிப்பதின் காரணம் என்ன?

(உ) இந்த அடிப்படை நிலவரியை ரத்து செய்ய, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) மலைப் பகுதிகளிலுள்ள பண்ணை நிலங்கள் புன்செய் நிலங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும, அவை சமவெளிகளிலுள்ள புன்செய் நிலங்களுக்கு இணையாகக் கருதப்படக் கூடாது என்று அரசு கருதுகிறது. எனவே, வருவாய்த்துறையின் 22-6-67ஆம் நாளிட்ட 1122ஆம் எண் அரசு ஆணையில் ஆணையிடப்